**08.01.2026**

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

விழுப்புரம்

அமர்வு வழக்கு எண். 274 /2025

அ.சா. 2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லட்சுமணன் | | |
| த/பெ | கண்ணன் | | |
| கிராமம் | கண்டமங்கலம் | தொழில் | எலக்ட்ரிக்கல் வேலை |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 53/2026 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 08.01.2026 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கண்டமங்கலத்தில் எலக்ட்ரிகல் கடை வைத்து வேலை செய்து வருகிறேன். நான் தற்போது திராவிடர் முன்னேற்ற கழகத்தில் மாவட்ட பிரதிநிதியாக இருந்து வருகிறேன். எனக்கு அ.சா.1 மூர்த்தியை தெரியும். தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள எதிரிகளில் எனக்கு யாரையும் தெரியாது. எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. இந்த வழக்கு குறித்து என்னை போலீசார் விசாரணை செய்யவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

கடந்த 25/09/2025-ம் தேதி நானும், எங்கள் தெருவை சேர்ந்த மூர்த்தி என்பவரும், விழுப்புரம் சென்று விட்டு, இருசக்கர வாகனத்தில் வீடு திரும்பி சென்று கொண்டிருந்தோம் என்றும், அப்போது இரவு சுமார் 12 மணியளவில், கண்டமங்கலம் கஸ்டம்ஸ் குடியிருப்பு அருகில் உள்ள அறிஞர் அண்ணா சிலைக்கு சிறிது தூரத்தில் பி.ஆர்.கே சன்ஸ் நகைக்கடை அருகில் ஆகாஷ், கணேஷ், யுவராஜ் மற்றும் சிலர் நின்று கொண்டு பேசிக் கொண்டிருந்தார்கள் என்றும், நானும், மூர்த்தியும் அவர்களை பார்த்துவிட்டு, இவர்கள் ஏன் இங்கே இந்த நேரத்தில் நிற்கிறார்கள்? என்று பேசிக்கொண்டு சென்றோம் என்றும், 26/09/2022-ம் தேதி 12.00 மணியளவில், நானும், மூர்த்தியும், டீ குடிக்க கடை தெருவிற்கு சென்றபோது, கஸ்டம்ஸ் குடியிருப்பு அருகில் இருக்கும் அறிஞர் அண்ணா சிலையை யாரோ மர்ம நபர்கள் உடைத்தும், முகத்தை துணியால் மூடியும், செருப்பு மாலை போட்டுள்ளதாகவும், பேசிக்கொண்டிருந்தாங்க என்றும், நாங்கள் இருவரும் அதிர்ச்சி அடைந்து பிறகு அங்கு சென்று பார்த்தபோது, அண்ணா சிலையின் கழுத்து, கையை உடைத்தும், சிலையின் முகத்தை தி.மு.க கட்சி கொடியால் மூடியும், முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா எம்.பி. அவர்களின் உருவப்படத்திற்கு கரும்புள்ளி, செம்புள்ளி வைத்து பேரறிஞர் அண்ணா சிலை கழுத்தில் மாட்டியும், மேலும் அண்ணா சிலையின் கழுத்தில் செருப்பு மாலை போடப்பட்டிருந்தது என்றும், பிறகு நானும், மூர்த்தியும், நேற்று இரவு வந்தபோது அங்கு நின்று கொண்டிருந்த ஆகாஷ், கணேஷ், யுவராஜ், மற்றும் சிலர் சேர்ந்துதான் இந்த சம்பவத்தை செய்திருக்கக்கூடும் என்று தெரிகிறது என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதன் பேரில் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

**மறுவிசாரணை**

**இல்லை**